# பெண் பணியாளர்களின் புதுமைப்பண்பும் சவால்களின் திறப்பாடும் (ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகளை முன்வைத்து)

***முனைவர் ச. வனிதா***
உதவிப் பேராசிரியர், தமிழியல்துறை
தருமபுரம் ஞானாம்பிகை அரசு மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை
DOI: https://doi.org/10.5281/zenodo.13783711

***ஆய்வுச் சுருக்கம்***

*மனித சமூகம் பிறப்பால் ஆண், பெண் என்றும் உடலியப் பிரிவால் இரண்டு நிலைகளில் எண்ணப்படுகிறார்கள். ஆனால் பாகுபாடற்ற மனித நேயத்தோடு அணுகும்போது "மனிதம்" என்ற ஒன்றுக்குள்ளேயே இருவரும் அடங்கிவிடுகின்றனர். ஆனால் வளர்ந்து வரும் நாகரிக உலகில் பல்வேறு தளங்களில் இருவரும் வேலை செய்யும் பணிகள் ஒன்றாக இருந்தாலும் கூலி என்பதில் பெண்ணுக்கு குறைவாகவே தரப்படும் நிலை உள்ளது. சில பணிகள் ஆண்களுக்கானவை என்றே முத்திரை இடப்படும் நிலையில் அவற்றையும் பெண்ணினம் செய்யமுடியும் என்ற திறப்பாட்டைத்தான் ஆண்டாள் பிரியதர்ஷினி தமது படைப்புகளில் வெளிப்படுத்தி வெற்றி கண்டுள்ளார். இவர் தாளம் தப்பிய தாலாட்டு முதல் சூரியனை விடிய வைப்போம் ஈறாக பதினேழு புதினங்களைப் படைத்துள்ளார். எட்டுச் சிறுகதைத் தொகுப்புகளையும் ஆறு கட்டுரைத் தொகுப்பு நூல்களையும் பத்துக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். அவர்தம் படைப்புகளில் எந்த எந்த புதுத்துறைகளில் பெண் பணியாளர்களைப் படைத்துள்ளார் எனவும் அவர்களுக்குரிய சவால்கள் என்ன என்பதையும் வெளிப்படுத்துவதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டது.*

***திறவுச்சொற்கள்:*** *தகனம்-வெட்டியான்-துப்புரவுத் தொழில்-ஆசிரியப்பணி-அறப்பணி- குடும்பப் பெண் - உழைக்கும் பெண்கள் - சுயதொழில் முனைவோர் - இட்லிக்கடை - தன்னார்வத் தொண்டு - பணிப்பெண்கள்.*

## முன்னுரை

*ஆண்டாள் பிரியதர்ஷினி படைப்புகளை நோக்குங்கால் பெண் எழுத்து, பெண் வாசனை, புதிய திருப்பாவை, முத்தங்கள் தீர்ந்து விட்டன, சரஸ்வதியின் சிலுவை, தகனம், சாருலதா, கதாநாயகி, சின்னவள் என்பனவாக எழுதியுள்ளவை யாவும் பெண்ணியம் சார்ந்தவையே. அதுவும் சாதாரணப் பெண் பாத்திரங்கள் தான் இவர்தம் நாவல் நாயகிகளாகியுள்ளனர். ஆண்களுக்கு நிகரான பல்வேறு பணிகளைச் செய்யும் மாந்தர்கள் தான் புதுமைகளையும் சவால்களையும் ஏற்றுச் செயல்படுத்தும் பக்குவப்பாடும் கொண்டவர்களாக மாறியுள்ளனர் என்பதை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் வலுவாகும்.*

## படைப்புக்கலையில் பெண்ணியப் பண்பாடு

*படைப்புக்கலை என்பது மிகவும் இன்றியமையாத ஒன்று. அசோகமித்திரன் படைப்புக்கலை என்றே ஒரு நூல் யாத்துள்ளார். அதில், "எழுத்து சிருஷ்டியின் வித்து என்றும் சொல் கடவுள் என்றும் கீழை மேலை இறைத் தத்துவங்களில் பிரமாணங்கள் உள்ளன. அந்த ஒரு தளத்தைத் தவிர பிற மனித அனுபவ நிலைகளில் சொல் மிகவும்*

*பின்னப்பட்டதொன்று. சொல் ஓர் அனுபவத்தின் அடையாளமேயாகுமன்றி, அதுவே, அனுபவம் ஆகாது. மேலும், அது எல்லா மனிதருக்கும் ஒரே அனுபவத்தை ஒரே மாதிரியாக உணர்த்துவதாகாது. இலக்கியம், சிறப்படைவது இந்த பல பரிமாணச் சாத்தியக் கூறினால் தான்[1] என்று குறிப்பிட்டுள்ள கருத்து எண்ணத்தக்கது. இந்த அளவில் தான் படைப்பாளி ஆண்டாள் பிரியதர்ஷினியைப் புரிந்துகொள்ள வேண்டும். அவரது துணிவு அவர் எதிர்நோக்கிய சவால்கள் என்று ஒவ்வொன்றையும் தாம் உருவாக்கும் மாந்தர்களில் பிரதிபலித்துப் பார்த்து வெற்றி கண்டவர். ஒரு பெண்ணாக இருந்து அவர் படைப்பில் எந்த மாதிரியாகப் பெண் மாந்தர்களை உருவாக்க வேண்டும் என்றும் அதுவும் பணிப்பெண்களின் பண்பு நலத்தோடு வெளிப்படும் தகவல்கள் பின்னர் வரலாறுகளாக பேசப்படும்.*

*ஆர். சண்முகசுந்தரத்தின் படைப்பாளுமையை எழுதிய பெருமாள் முருகன் குறிப்பிடும்போது, "ஆர்.ஷண்முக சுந்தரத்தின் படைப்புலகில் மிகவும் சாதாரணமாக இயங்கிக் கொண்டிருப்பவர்கள் கைம்பெண்கள். கைம்பெண்கள் வராத நாவலே இல்லை என்று கூடச் சொல்லிவிடலாம் என்று குறிப்பிட்டு, நாகம்மாள், அறுவடையில் தேவானையின் அத்தை அங்கம்மாள் தனிவழியில் மாரக்காள், பனித்துளியில் முத்தக்காள், அழியாத கோலத்தில் வீரத்தாள்[2] என்று படைப்பாளி மாந்தர்களின் பண்புநிகர் செயல்களை உள்வாங்கி எழுதுவர். அந்த வகையில் ஆண்டாள் பிரியதர்ஷினியும் பல்வேறு பெண் பணியாளர்களைப் படைத்துக்காட்டியுள்ளார்.*

**தகனம் வெளிப்படுத்தும் பணிப்பெண் நிலை**

*ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்பில் குறிப்பிடத்தக்க ஒரு படைப்பு தகனம். இதில் ஆண்கள் செய்துவந்த ஒரு மரபுத் தொழிலான வெட்டியான் தொழிலை வறுமையின் பிடியில் வாழ்ந்த சின்னப்பொண்ணு என்ற மாந்தர் வழி செயல்படுத்தியுள்ளார். சுடுகாட்டில் பிணம் எரிப்பது, புதைப்பது ஆகிய பணிகளை ஏற்று செய்து வந்தாள். அதனால் அவளுடைய குடும்பத்தில் ஓரளவு வருமானம் கிடைத்தது. சில நேரங்களில் அநாதைப் பிணங்களும் வரும். அதில் வருமானத்தை எதிர்பார்க்க முடியாது. வெறும் பணியாகவே முடிந்து விடுவதும் உண்டு. தற்கொலை செய்து கொண்டு இறந்து புதைக்கப்பட்ட பெண் பிணங்களையும் காவல் அதிகாரிகள் விசாரணைக்கு எடுக்கச் சொல்லும் போதெல்லாம் அதையும் துணிவுடன் எடுத்து மீண்டும் அடக்கம் செய்து காட்டியவளாகவே சின்னப்பொண்ணு படைக்கப்பட்டுள்ளாள், இது மிகவும் எண்ணிப் பார்க்க வைக்கக்கூடிய பணியாகும் என்பதால் ஆண்டாள் பிரியதர்ஷினி இந்த சின்னப்பொண்ணு மாந்தரைப் படைத்து பெண்களுக்குரிய சவால் என்ன என்பதையும் இதை எவ்வாறு எதிர்கொண்டு சமூகத்தில் புதுமைப் பெண்ணாகத் திகழ்ந்தாள் என்பதையும் காட்டியுள்ள திறம் ஒன்றே பெண் படைப்பாளியின் ஈர நெஞ்சத்தை அறிய முடிகின்றது. சின்னப்பொண்ணு புதைத்து மீண்டும் அதைத் தோண்டி எடுத்த நிகழ்வை, "அட இன்னா சார் நீங்க? இந்த நாத்தம் தான் சோறு போடுது எங்களுக்கு பசியும் பட்டினியும் குடலைத் தின்னுச்சுன்னா என்ன தொழிலும் வேணாம் பண்ணலாம். கொலைக்குத்தம், திருட்டு, அவுசாரி இதெல்லாம் தான்; சாறத் தொழில். இது புண்ணியத் தொழில்[3] என்று தனது தொழிலின் மேன்மையை உரைக்கும் சின்னப்பொண்ணு சிந்தனைக்கு விருந்தாகின்றாள்.*

*மற்றொரு இடத்தில் அவளின் பணி நேர்த்தியை செயல்முறையாய் சொல்லும் நிகழ்வு எண்ணத்தக்கது. "கொஞ்சம் வறாட்டியோடு, பருப்பு, நெய், டால்டான்னு தின்ற பணக்காரப் பொணம்னா புஸ்ஸுன்னு பத்திக்கும் இதுங்கல்லாம் நாதியத்த அனாதைப் பொணங்க எரியக்கூட முரண்டு*

*புடிக்குதுங்க*[4] *என்பதால் ஒவ்வொரு சமூக மக்களையும் பிணம் எரிப்போர் அல்லது அடக்கம் செய்வோர் அறிந்தே இவ்வாறு உரைக்கின்றனர்.*

**விடியும் நேரத்தில் விஜயா**

*பணிப்பெண்களின் நிலையில் விடியும் நேரம் படைப்பில் விஜயா என்ற மாந்தர் வீட்டு வறுமையின் காரணமாகவே துணிக்கடை ஒன்றில் வேலை செய்கிறாள். சில ஆண்களின் பார்வையில் விஜயாவை பார்ப்பார்கள். ஆனாலும் தொழிலுக்கு வந்துவிட்டோம் என்று சமாளித்துக் கொண்டு பணிபுரிவாள். ஒரு நாள் உள்ளாடை வாங்க வந்தவன் விஜயாவிடம் பல கேள்விகளை அவளை உட்படுத்தியே கேட்டான். அப்போது அவள், "உங்க ஒய்போட அளவு சொல்லுங்க சார். அளவு என்னன்னு தெரியல்லியே சுமாரா உங்களோட மாதிரிதான். உங்க அளவு என்ன மேடம்?"*[5] *அவளுக்கு ஆத்திரமும் கோபமும் வர அவற்றையெல்லாம் அடக்கிக்கொண்டு ஒரு புதுமைப் பெண்ணாக பதில் அளித்தாள். "உங்க மனைவி அளவு தெரியலைன்னா உங்க அக்கம் பக்கத்து வீட்டு ஆம்பிளைங்க கிட்டக் கேட்டுட்டு வாங்க*[6] *என்றதும் அவன் கடையை விட்டே நகர்ந்தான். இப்படி சாதாரண கடைகளிலும் ஆண்களின் கேலி இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இதையும் நாம் சிந்திக்க வேண்டும். இவ்வாறு பேசுவதையும் சில பெண்கள் எதிர்பார்க்கின்றனரே. அவர்களை என்ன செய்ய முடியும். இதுதான் சமுதாயம். விடியும் நேரத்தில் விஜயாவின் மனநிலை எல்லாப் பெண்களுக்கு அமைந்தால் பணிபுரியும் இடங்களில் ஏற்படும் பல சிக்கல்களைத் தீர்க்க முடியும்.*

**சூரசம்ஹாரமும் சுயதொழில் பார்வதியும்**

*மகளிர் எங்கு சென்றாலும் எந்தத் துறையில் பணியாற்றினாலும் ஒன்று அந்த நிறுவனத்தில் உள்ள ஆண்களால் சிக்கல்கள் எழும். இல்லை வீட்டில் ஏன் பணிக்குப் போக வேண்டும் என்று சிக்கல் எழும். உறவினர்கள் மத்தியில் இவளெல்லாம் வேலைக்குப் போயி சம்பாதிச்சு அக்குடும்பம் நடத்தனுமா என்றும் பல்வேறு சிக்கல்கள் எழுவதற்கு மத்தியில் சுயதொழில் புரிந்து அதனால் சுதந்திரமாக வாழ முற்பட வேண்டும் என்னும் புரிதலையும் ஆண்டாள் பிரியதர்ஷினி சூரசம்ஹாரம் என்ற படைப்பு வழி வெளிப்படுத்தியுள்ளார்.*

*ஆண் துணையின்றி தன்னுடைய இரண்டு மகன்களையும் இட்லி கடை நடத்தியே வளர்த்தாள். மூத்த மகன் அழகேசன் பொறுப்பற்றவன். அரசியல் தலைவர்களிடம் அடியாளாகப் பணிபுரிந்து பலமுறை சிறைக்குச் சென்றான். அவனை மீட்பதற்கும் பார்வதிக்கு இந்த இட்லிக்கடை வருமானமே உதவியது. இளைய மகன் குமரேசன் நன்கு படித்து வந்தான். கல்லூரியிலும் சிறந்த மாணவனாக விளங்கினான். ஓய்வு நேரங்களில் வீடுகளுக்குப் பேப்பர் போட்டு அதனால் கிடைத்த சொர்ப்ப வருமானத்தையும் தாயிடம் கொடுத்து அன்பைப் பெற்றவன். ஆனாலும் தாய் இருபது வருடங்களாக இட்லிக்கடை நடத்திவரும் நிகழ்வும் அவளின் வாழ்வியல் போராட்டங்களுமே சூரசம்ஹாரமாக நாவலுக்குப் பெயர் அமைந்தது. சுயதொழிலில் ஈடுபட்டால் வாழ்வில் எவ்வளவோ வளம்பெற முடியும் என்பதை மகளிர் உணர்ந்து கொள்ள வேண்டும். அதனால் தான் பாரதியும் "கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் என்று பாடினான். இந்த நிகழ்வாக்கமே பார்வதியின் குடும்பத்தை, குறிப்பாக ஆண் துணையில்லா பெண்கள் உணர வேண்டும். பார்வதி இட்லிக் கடையே எல்லாம் தந்தது என்கின்றாள். அவளின் துணிவும், தன்னம்பிக்கையும் பிற மகளிருக்கு எடுத்துக்காட்டு. சமுதாயத்தில் பெண்கள் நிலை உயர வேண்டுமானால் ஒரு தொழிலைக் கட்டாயம் கற்றுக்கொண்டால் அது வாழ்நாள் முழுவதற்கும் வழிகாட்டும். பார்வதியின் கூற்று நினைக்கத்தக்கது. அவள், "குடியிருக்க சின்னதாய்க் குடிசைமாற்று*

*வாரியத்தின் வரிசை வீடாயிற்று. அழகேசன், குமரேசன் இரண்டு பசங்களுக்கும் உடை, சாப்பாடாயிற்று, கைவேலை குறைக்க ஒரு கிரைண்டர் ஆயிற்று. குமரேசன் பேப்பர் போடச் சைக்கிள் ஆயிற்று. அவனின் கல்லூரிப் படிப்புச் செலவாயிற்று[7] இதற்கு எல்லாம் ஈடு கொடுப்பது இந்த இட்லிக்கடை தான் என்பதால் அறிவுறுத்தியுள்ளார்.*

*கதாநாயகி என்ற புதினத்தில் நடிப்புத் தொழிலில் ஈடுபட்ட நீலாயதாட்சி குறித்தும் அவளின் வருமானத்தில் குடும்பம் நடப்பதும் அவளின் சகோதரியைக் கட்டிக்கொடுத்த இடத்தில் அவள் கணவன் வரதட்சணை வாங்கிவர வீட்டுக்கு அனுப்புவதும் அவளுக்கு வேண்டியதைச் செய்து மீண்டும் அக்காவை வாழ அனுப்புவதற்கும் நீலாயதாட்சியின் வருமானமே உதவியது. அவளின் மேடை நாடகத்திறனும் தொலைக்காட்சி நடிப்பும் வேறு வேறானவை என்பதையும் நடிப்பு வேறு குடும்பம் வேறு என்பதையும் உணர்ந்து வாழ்ந்தவள். எப்படியான வேடத்திலும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்வதிலும் சிறந்தவள். அவள் நடித்த யுத்தகாண்டம் என்ற நாடகத்தில் சிறந்த நடிகைக்கான விருதையும் சிறந்த இயக்குநருக்கான விருதும் கிடைத்ததற்கு இவளின் நடிப்பே காரணமாய் அமைந்தது. வறுமை காரணமாக நடிப்புத் தொழிலுக்கு வந்து குடும்பத்தையும் காப்பாற்றி சிறந்த நடிகைக்கான முதல் பரிசையும் ஐம்பதாயிரம் ரூபாய் தொகையையும் பெற்றதில் செய்யும் தொழிலில் கிடைத்த மதிப்பு, உழைப்பு என்பவைதான் காரணம், என்பதை ஒவ்வொருவரும் புரிந்திட வேண்டும் என்கிறாள்.[8]*

**ஆசிரியப்பணி**

*பெண்களுக்கு மிகவும் பாதுகாப்பான தொழில் உண்டென்றால் அது ஆசிரியப் பணி தான் என்பதில் ஆண்டாள் பிரியதர்ஷினி கருத்தொற்றுமை உள்ளவராகக் காணப்படுகிறார். தம் படைப்பில் உயிரெழுத்து, ஆயத எழுத்து என்ற படைப்பில் வரும் பூரணி ஆசிரியை, வேடிக்கை மனிதர்கள் படைப்பில் இடம் பெறும் சரஸ்வதி ஆசிரியை, கட்டில் மனசு படைப்பில் இடம்பெறும் காவேரி ஆசிரியை யாவரும் எண்ணத்தக்கவர்கள். பெண் கல்வியின் இன்றியமையாமையை வலியுறுத்தும் நோக்கிலும் அவர்களின் சுதந்திரமான பாதுகாப்பான வாழ்வியல் நெறியைத் தகவமைத்துக் கொள்ளவும் கல்வி மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதை பல படைப்புகளில் வெளிப்படுத்திய எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி. கல்விக்குரிய மதிப்பு அதைத் தொழிலாக ஏற்றுப் பணியாற்றும் ஆசிரியர் தொழில் மிகப் புனிதமானது. அதிலும் நல்லாசிரியராக வருவது மாணவர்களை உருவாக்குவது அவர்கள் மனமாசுகளைக் களைவது என்பதெல்லாம் மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். இவற்றை ஆசிரியப் பணியால் மட்டுமே தரமுடியும். மாணவ சமுதாயத்தை மாற்ற முடியும் என்பது ஆண்டாள் பிரிதர்ஷினிக் கனவு. அதை ஆசிரியர் மாந்தர் வழி நிறைவு செய்துள்ளார்.*

*எத்தகைய கொடுமையையும் கல்வியால் களையலாம்என்பதற்கு வேடிக்கைமனிதர்கள் நாவலில் இடம்பெற்ற சரஸ்வதி மாந்தரே சான்று. வாழக்கற்றுக் கொள்ளும் நெறியையும் பிறருக்கு எவ்வாறு எடுத்துச் சொல்வது என்ற வாழ்வியலையும் கல்வியும் ஆசிரியத் தொழிலுமே வழிகாட்டும் என்பதையும் விளக்கியுள்ளார்.*

*ஆசிரியர் பணி சமூகத்தின் மதிப்புமிக்கப் பணியாக இருந்த காலம் இருந்தது. ஆனால் இன்றைக்கு மதிப்பில்லாப் பணியாகவும் மாறி வருகிறது. அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இன்மை, சுதந்திரம் பறிக்கப்பட்டு மாணவர்களைத் திட்டவோ அடிக்கவோ கூடாத நிலையாக உள்ளதால் கல்வித்தரமும் குறையத் தொடங்குகிறது. இதனால் ஆசிரியத் தொழில் என்பதும் மனநிறைவானதாக இல்லை என்பதே நிதர்சன உண்மை. ஒரு*

*ஆசிரியருக்கு ஏதேனும் உடற்சுகவீனம் ஏற்பட்டு தொடர்விடுமுறை எடுத்தால், பள்ளி நிர்வாகம் மாற்று ஆசிரியரை நியமித்து அவர்களை நீக்கும் நிலைக்குச் செல்வதை காவேரி பாத்திரம் வழி உணர்த்தியுள்ளமையும் அறியத்தக்கது.*

**தொகுப்புரை**

*ஆணுக்கு நிகரான பணிகளிலும் பெண்கள் பணியாற்ற முடியும் என்ற அசைக்க முடியாத கருத்து கொண்டவர் ஆண்டாள் பிரியதர்ஷினி. இன்றைக்குப் பெண்கள் பெண் காவலர்களாகவும், இராணுவத்தில் பணியாற்றுபவர்களாகவும் மிகவும் சவாலான பணிகளிலும் இருப்பது பாரதியின் புதுமைப் பெண் கனவை மெய்ப்பித்தாலும் அவையெல்லாம் ஏட்டளவில்தான் சாத்தியப் பாடாய் உள்ளன. காரணம் பணிபுரியும் இடத்திலும் சமூகத்திலும் பல இன்னல்களுக்கு ஆட்படும் நிலை உருவாகியுள்ளது. எல்லாப் பணிகளையும் பெண்கள் செய்ய முனைகிறார்கள் என்பதற்குத் தான் வெட்டியான், துப்புரவுத் தொழில் போன்ற ஆண்களுக்கேயுரிய தொழில்களையும் தைரியமுடன் செய்கின்றனர் என்பதை உணர்த்தியுள்ளார். பெண் பாதுகாப்பு என்பது கல்வியால் மட்டுமே சாத்தியப்படும். கல்வி இருந்தால் எப்படியும் சமுதாயத்தில் எத்தகைய எதிர்நிலை வந்தாலும் சமாளிக்கவியலும் என்பதையும் ஆண்டாள் பிரியதர்ஷினி தம் படைப்புகள் வழி பல்வேறு மாந்தர்களை உருவாக்கி வெளிப்படுத்திய பண்பாடு பெண்ணியத்திற்கு உயிர்ப்பான பண்பாட்டுப் பதிவுகளாகும்.*

**குறிப்பு விளக்கம்**

1. *அசோகமித்திரன், படைப்புக்கலை, காலச்சுவடு பதிப்பகம், 1987, ப.48.*
2. *பெருமாள் முருகன், ஆர்.ஷண்முக சுந்தரத்தின் படைப்பாளுமை, காலச்சுவடு, 2022, ப.59.*
3. *ஆண்டாள் பிரியதர்ஷினி, தகனம், ப.73.*
4. *மேலது, ப.110.*
5. *ஆண்டாள் பிரியதர்ஷினி, விடியும் நேரம், ப.3.*
6. *மேலது, ப.5.*
7. *மேலது, சூரசம்ஹாரம், ப.74.*
8. *மேலது, கதாநாயகி, ப.3.*